# நிக்கவரட்டிய பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, நிக்கவரட்டிய பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிக்கவரட்டிய பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானியம் ரூபா 249,354 ஆனது வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் மூலதன மானியத்தின் கீழ் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி அமைச்சின் மானியமாக சபையின் பாலர் பாடசாலைகளுக்கு கிடைத்திருந்த ரூபா 19,590 தொகையான உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற கருமபீட மேசை ஒன்று விசாரணையாளர் மேசையொன்று மற்றும் தொலைக்காட்சி ஒன்றினதும் பெறுமதிகள் கணிப்பீடு செய்யப்பட்டு தளபாடங்களும் உபகரணங்களும் கணக்கின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,954,996 ஆக இருந்ததுடன் துணைப்பதிவேடு/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,955,771 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டு காலத்திற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,664,457 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

**கணக்காய்வுக்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 4,045,983 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,488,289 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,444,822 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,132 | 1,016 | 1,189 | 1,132 | 1,087 | 1,283 |
| (ii) | வாடகை | 6,160 | 6,944 | 773 | 5,663 | 6,762 | 964 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 775 | 758 | 17 | 850 | 715 | 17 |
| (iv) | ஏனைய வருமானம் | 28,995 | 27,039 | 12,978 | 29,371 | 27,258 | 14,620 |
| | கூட்டுத்தொகை | 37,062 | 35,757 | 14,957 | 37,016 | 35,822 | 16,884 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டுள்ள ரூபா 5,102,783 ஆன தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 7,875,281 முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

**2.2.4 சபைச் சொத்துக்களை வாடகைக்கு விடல்**

மீளாய்வாண்டில் வருடாந்த கேள்வி கோரல் முறையில் வாடகைக்கு விடுவதற்காக கேள்வி கோரப்பட்டிருந்த ஆகக் குறைந்த கேள்விவிலையான ரூபா 637,165 தொகைக்கான 11 சொத்துக்கள் வாடகைக்கு விடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 வியாபர அனுமதிப்பத்திரக் கட்டணமும் வியாபார வரியும்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் விதி 56 தொடக்கம் 66 வரையிலுள்ளதன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள வியாபாரம், வர்த்தகம், தொழில்கள் என்பவைகளுக்கான அனுமதிப்பத்திரம் உரிய வருடத்தின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் பிரதேச சபையினால் மீளாய்வாண்டின் மே மாதம் வரை தாமதிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2009 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 5,400 தொகையான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பிரிசோதனைகளின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தினுள் 15 சட்டத்திரணிகள் அலுவலகம் காணப்பட்டிருந்தும் அதில் ஒரு நிறுவனத்திற்கு மாத்திரமே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**2.2.6 இறைச்சிக்கடை, பழக்கடைகள் மற்றும் தற்காலிக கடைகளுக்கான வாடகை**

சபையின் 4 இறைச்சிக்கடைகளில் 3 இற்காகவும், 7 பழக்கடைகளில் 1 இற்காகவும் மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. 7 பழக் கடைகளுக்குரிய ரூபா 25,860 ஆன மாதாந்த தவணைகள் 09 – 17 இற்கு இடையிலான நிலுவையொன்றும் 3 தற்காலிக கடைகளுக்குரிய ரூபா 30,640 ஆன மாதாந்த தவணைகள் 4 – 13 இற்கிடையிலான மீதியொன்றும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்டது.

**2.2.7 பொதுச் சந்தைக் கடை வாடகை**

மாதாதந்த தவணைகள் 100 – 70 இற்கிடையிலான கூட்டுப் பெறுமதி ரூபா 153,483 ஆன நிலுவை காணப்பட்ட நிகவெரட்டிய பொதுச் சந்தைக் கடைகளில் 3 கடைகள் மீளாய்வாண்டில் ஆகஸ்ட் மாதத்தின் போது சபைக்கு கையளிக்கப்பட்டுக் காணப்பட்ட

போதிலும் அதற்கு மேற்கொண்டு மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. நீண்ட காலமாக வாடகைக்கு விடுவதின் கீழ் பொதுச் சந்தையில் 6 கடைகளுக்குரிய ரூபா 86,980 ஆன மாதாந்த தவணைகள் 15 – 20 இடையிலான மீதியொன்று காணப்பட்டது.

**2.3 செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப் பட்டது | 2010 உள்ள வாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப் பட்டது | 2009 உள்ள வாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 20,825 | 18,813 | 2,012 | 20,605 | 18,136 | 2,469 |
| ஏனையவை | 13,593 | 12,456 | 1,137 | 13,415 | 11,328 | 2,087 |
| உப மொத்தம் | 34,418 | 31,269 | 3,149 | 34,020 | 29,464 | 4,556 |
| மூலதனச் செலவினம் | 34,195 | 70,627 | (36,432) | 34,290 | 44,014 | (9,724) |
| மொத்தம் | 68,613 | 101,896 | (33,283) | 68,310 | 73,478 | (5,168) |

**2.4 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| இரண்டாம் நிலைதரங்கள் | 26 | 20 |
| ஆரம்ப தரங்கள் | 51 | 45 |
| ஏனைய(அமைய, நாளாந்த, தற்காலிக) | -- | 14 |

## 2.5 சொத்து முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்படவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 14,984,094 ஆக இருந்ததுடன 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 5,289,964 ஆக இருந்தது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

சேவை நிலைய இடமாற்றங்களுக்குரிய 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த 03 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட ஊழியர் கடன் முற்பன மீதிகள் ரூபா 2,701 ஆக இருந்தது.

## 2.6 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்த முடியாத கொடுக்கல், வாங்கல்கள்

சபையில் 2010 ஒக்தோபர் 28 ஆந் திகதி நடைபெற்ற விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 33,700 இற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஏ) பிரிவின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடமிருந்து பெறப்பட வேண்டிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான நிகரவெட்டிய வாராந்த சந்தை 1999 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு எடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விப் பத்திரம் திறக்கப்படாமல் சபையினால் நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் உரிய கேள்விதாரரினால் சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் அதற்குரிய மாகோ மாவட்ட நீதிமன்றத்தில் 2002 ஏப்ரல் 29 ஆந் திகதிய வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 80,000 நட்டம் மற்றும் இதற்குரிய வழக்குக் கட்டணத்தினையும் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரையிலும் அப் பணம் செலுத்தப்படாதிருந்ததுடன் 2010 செப்தெம்பர் 07 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் மொத்தத் தொகையாகிய ரூபா 114,247

இனை உரிய முறைப்பாட்டாளர் தரப்பினருக்கு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு காணியொன்றினை சுவீகரிப்பதற்காக 2006 ஆம் ஆண்டின் போது அதற்குரிய செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணமான ரூபா 50,000 தொகையினை நிகவெரட்டிய பிரதேச செயலாளரிடம் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் காணியினை சுவீகரிப்பதற்கோ அல்லது வீதியினை நிர்மாணிப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(I) பிரதேச சபையில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையை செலுத்த வேண்டிய ஊழியர்களுக்குரிய சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையை உரிய முறையில் கொடுப்பனவு செய்யாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அத்தகைய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,445,078 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவனையாக ரூபா 9,082 வீதம் அந்நிதியத்தால் அறவிடப்பட்டு வந்திருந்த போதிலும், அவ் அறவீடு சபையின் எந்த உத்தியோகத்தர்களுக்கு என சபை அறிந்திருக்கவில்லை.

(II) பிளிசாறு செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் மே மாதத்தின் போது ரூபா 60,000 செலவில் 50 கூட்டுப்பசளை பெரல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 45 பெரல்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமானக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துககள் முகாமைத்துவம்